இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 14.10.2026

மெட்ரோ - தி.மு.க.வின் கொடை!

சென்னை மெட்ரோ 2 திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார் பிரதமர் மோடி. உண்மையில் அதனைத் திறந்து வைக்கும் முழுத் தகுதி படைத்தவர் முன்னாள் முதலமைச்சர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான்.

பூந்தமல்லி போரூர் - வடபழனி இடையேயான சென்னை மெட்ரோ வழித்தடம் (திட்டம் 2) என்பது முழுக்க முழுக்க திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சென்னை மக்களுக்குச் செய்து கொடுக்கப்பட்ட மாபெரும் கொடையே ஆகும்.

சென்னையின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், சென்னை மக்களுக்கு மிக வசதியான போக்குவரத்துத் திட்டங்களைத் தரவும் உருவாக்கப்பட்டதுதான் மெட்ரோ ரயில் திட்டம் ஆகும். இது தி.மு.க. ஆட்சியில் உருவானது. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னால் இதற்கான விதை போடப்பட்டது.

மெட்ரோ 1 என்ற திட்டத்துக்காக அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்களின் உத்தரவின் பேரில் அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களும் அதிகாரிகளும் 7.2.2008 அன்று ஜப்பான் தலைநகர் டோக்கியோ சென்று அங்குள்ள ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையுடன் (Japan International CoOperation Agency) பேச்சுவார்த்தை நடத்தி நிதியுதவி பெற்றார்கள். அதன் அடிப்படையில் கடன் வழங்குவதற்கான ஒப்பந்தம் 2.11.2008 அன்று ஒன்றிய அரசுக்கும் ஜப்பான் அரசுக்கும் இடையே கையெழுத்தானது. ஒன்றிய மாநில அரசுகளின் நிதி 41 சதவிகிதம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதி 59 சதவிகிதம் என்று அந்தத் திட்டம் உருவானது.

இன்றைக்கு சென்னை மக்கள் மெட்ரோ ரயிலில் பயணிக்க காரணம் தலைவர் கலைஞரும், திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களும்தான்.

இந்த அடிப்படையில் தான் மெட்ரோ 2 என்ற திட்டம் உருவானது. இதற்கு நிதி ஒதுக்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு முடிந்தவரையில் டிமிக்கி கொடுத்து வந்தது.

மெட்ரோ இரண்டாம் கட்ட திட்டத்தின் நிதி ஒதுக்கீடு என்பது ஒன்றிய அரசும், மாநில அரசும் 50 : 50 விழுக்காடு பங்கிட்டுத் தர வேண்டும். இந்தத் திட்டத்துக்கு ரூ.63 ஆயிரம் கோடி செலவாகும். இதற்கான ஒப்புதலையும் தராமல் இருந்தது ஒன்றிய அரசு. மாநில அரசு செலவு செய்வதற்கான நிதியைத் திரட்ட பன்னாட்டு கடனுதவி பெறுவதற்கு அனுமதியும் தரவில்லை. தி.மு.க. அரசு ரூ. 9 ஆயிரம் கோடியை ஒதுக்கியது. ஒன்றிய அரசின் நிதி வரவில்லை என்றால் இந்தத் திட்டத்தை முழுமையாக மாநில அரசின் நிதியில் இருந்து தான் செயல்படுத்த வேண்டும். ஆண்டுக்கு ரூ. 12 ஆயிரம் கோடியை இதற்காக ஒதுக்கினால் தான் மெட்ரோ இரண்டாம் கட்ட திட்டத்தை செயல்படுத்தி முடிக்க முடியும். இப்படிப்பட்ட நெருக்கடியில் தள்ளியது ஒன்றிய அரசு.

கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையிலும், 2024 செப்டம்பர் நிலவரப்படி, மாநில அரசின் சொந்த நிதியிலிருந்து 11,762 கோடி ரூபாயும், வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் கடனுதவி மூலம் ரூ.6,802 கோடி என மொத்தம் 18,564 கோடி ரூபாயைச் செலவிட்டு திராவிட மாடல் ஆட்சியில் இரண்டாம் கட்டப் பணிகளை நிறுத்தாமல் தொடரப்பட்டது. அதனால்தான் இன்று பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்படும் நிலைக்கு வந்தது. இல்லாவிட்டால் அப்படியே மூடப்பட்டு இருக்கும்.

* சென்னை மெட்ரோ இரயில் திட்டம் 1 நிறைவேற்றியதும் தி.மு.க. அரசே!

* சென்னை விமான நிலையம் - சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் - கோயம்பேடு புறநகர்ப் பேருந்து முனையம் எனச் சென்னையின் முக்கியமான போக்குவரத்து மையங்களை ரயில் மூலமாக இணைத்ததும் தி.மு.க. அரசே!

* சென்னை மெட்ரோ ரயில் திட்டம் பணிகளை 2021 ஆம் ஆண்டு விரைவுபடுத்தியதும் தி.மு.க. அரசே!

* மூன்று ஆண்டு காலமாக நிதியே கொடுக்காமல் வைத்திருந்த ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்தி நிதி கொடுக்க வைத்ததும் தி.மு.க. அரசே!

* ஒன்றிய அரசு பணம் தராவிட்டால் என்ன என்று நினைத்து மாநில அரசின் நிதியை ஒதுக்கியதும் தி.மு.க. அரசே!

* மெட்ரோ திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் முதலமைச்சராக இருந்தபோது ஆய்வு செய்து வந்தார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

* இதன் அடுத்த கட்டமாக மூன்றாம் கட்ட மெட்ரோ விரிவாக்கப் பணிகளையும் திட்டமிட்டது திராவிட மாடல் ஆட்சி. இவையும் செயல்படுத்தப்பட்டால் அதிகப்படியான மெட்ரோ ரயில் ஓடும் நகரமாக சென்னை உயரும்.

* சென்னையைப் போலவே கோவை, மதுரை நகரங்களிலும் மெட்ரோதிட்டங்கள்செயல்படுத்தப்படவேண்டும்என்றுமுதலமைச்சராக இருந்த போது திட்டமிட்டு அதனை ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு அனுப்பி வைத்தார். அதனை ஒன்றிய அரசு மறுத்துள்ளது. செயல்படுத்த முடியாது என்று சொல்லி விட்டது. திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்திருந்தால் அதனையும் ஒன்றிய அரசிடம் தொடர் வலியுறுத்தலைச் செய்து செயல்படுத்த வைத்திருப்பார் திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

"ஆண்டுக்கணக்கில் நான் சுமந்து வளர்த்தெடுத்த சென்னை மெட்ரோ இரயில் எனும் குழந்தை அடியெடுத்து வைப்பதில் தாய்மை உணர்வுடன் பெருமை கொள்கிறேன்" என்று அவர் அறிக்கை வெளியிட்டு இருப்பது முழுமையான உண்மை ஆகும்.

யார் திறந்து வைத்தாலும், யார் வேடிக்கை பார்த்தாலும் சென்னை மெட்ரோ ரயில் கனவை நிறைவேற்றித் தந்தது தமிழினத் தலைவர் கலைஞரும், திராவிட நாயகன் மு.க.ஸ்டாலினும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிகளுமே!

இது பிரதமர் மோடிக்குத் தெரியும். அதனால் தான் தனது உரையில் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது பெயரையும் மறக்காமல் குறிப்பிட்டார்.



கழக ஆதிதிராவிடர் நலக்குழுவின் சென்னை கிழக்கு மாவட்டத் துணை அமைப்பாளர் வழக்கறிஞர் குமரவேல் அவர்கள், அண்மையில் நடந்து முடிந்த மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் பரப்புரைப் பணிக்கிடையே, அப்பகுதியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தபோது மாரடைப்பினால் உயிரிழந்தார். நேற்று (13.10.2026) கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் உள்ள குமரவேல் அவர் களது இல்லத்துக்கு நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்துக்கு மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்குத் தனது ஆறுதலைத் தெரிவித்தார். உடன் முன்னாள் அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரு மான பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, சட்டத் துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் ஆகியோர் உள்ளனர்.

காவல்துறை தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன!

த.வெ.க. அரசுக்கு எதிரான சமூக வலைதளப் பதிவுகள் முடக்கம்!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. குற்றச்சாட்டு! உரிய முறையில் விசாரிக்க ஒன்றிய அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, அக். 14 -

த.வெ.க. அரசுக்கு எதிரான சமூக வலைதள பதிவுகள் நீக்கப்படுவது ஏன்..? என ஒன்றிய அமைச்சருக்கு கழகத் துணைப் பொதுச் செய லாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கடிதம் எழுதியுள்ளார். அரசியல் விமர்சனங்களை முடக்க காவல் துறை, அரசின் பிற துறைகள் தவறாக பயன்படுத்தப்படுகின்றன. இது தொடர்பாக மெட்டாவிடம் விளக்கம் கேட்கவும், விசாரிக்கவும் வேண்டும் என அவர் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.



ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணாவுக்கு எழுதிய அந்த கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ள தாவது:-

சமூக ஊடகத் தளங்களில், குறிப்பாக இன்ஸ்டாகிராமில் (Insta gram), கருத்து சுதந்திரம் மற்றும் ஜனநாயக ரீதியிலான அரசியல் விவாதங்கள் தொடர்பான ஒரு தீவிரமான கவலைக்குரிய விஷ யத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர இக்கடிதத்தை எழுது கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள த.வெ.க. அரசாங்கத்தை விமர்சிக்கும் இன்ஸ்டாகிராம் கணக்குகள் மற்றும் பதிவுகள் தொடர்ந்து கட்டுப் படுத்தப்படுவதும், நீக்கப்படுவதும், அவற்றின் பார்வைத்தன்மை (visibility) குறைக்கப்படுவதும் எங்கள் கவனத்திற்கு வந்துள்ளது. இத்தகைய கட்டுப்பாடுகள் மீண்டும் மீண்டும் விதிக்கப்படுவது, சட்டப் பூர்வமான அரசியல் விமர்சனங் களை முன்வைக்கும் கணக்குகள் அல்லது உள்ளடக்கங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க காவல் துறை மற்றும் பிற அரசு துறைகள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்ற னவா என்ற கவலையை எழுப்பி யுள்ளது.

'தகவல் தொழில்நுட்பம் (இடை நிலை நிறுவனங்களுக்கான வழி காட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் ஊடக நெறிமுறைகள்) விதிகள், 2021' (Information Technology Rules, 2021). இடைநிலை நிறுவ னங்களை நிர்வகிக்கும் குறை தீர்ப்பு மற்றும் பொறுப்புக்கூறல் வழிமுறைகளை நிறுவியுள்ளன. இந்த வழிமுறைகள், தளத்தின் நடவடிக்கைகளை எதிர்த்துப் போட் டியிட பயனர்களுக்குப் பாதுகாப் பையும் வழங்குகின்றன. எனவே, மாறுபட்ட கருத்துக்களை அல்லது எதிர்ப்புக் குரல்களை ஒடுக்கு வதற்கு இந்தக் குறைதீர்ப்பு வழி முறைகள் ஒரு கருவியாகப் பயன் படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வது அவசியமாகும்.

த.வெ.க. மற்றும் அதன் ஆதர வாளர்களால் பரப்பப்பட்ட போலிச் செய்திகள் குறித்து நடவடிக்கை எடுக்காத டிஜிட்டல் இடைநிலை நிறுவனங்களுக்கு எதிராக, சென்னை உயர் நீதிமன்றத்தில் 'ரிட் மனு (குற்றவியல்) எண் 2249/2026'ஐத் தாக்கல் செய்து தி.மு.க. இதற்கு முன்பு சட்ட நடவ டிக்கை எடுத்திருந்தது. அந்த ரிட் மனு இன்னும் நிலுவையில் உள்ள நிலையில், போலிச் செய்திகளை நீக்குவதற்குப் பதிலாக, தற்போதைய த.வெ.க. தலைமையிலான மாநில அரசுக்கு எதிரான உண்மையான விமர்சனங்களை அந்த இடை நிலை நிறுவனங்கள் நீக்கத் தொடங்கியுள்ளன;

மேலும் அவை தங்கள் செயல் பாட்டில் வெளிப்படையான பாரபட் சத்தைக் காட்டுகின்றன. சம்பந்தப் பட்ட இடைநிலை நிறுவனங்களின் குறைதீர்ப்பு வழிமுறைகள் மற்றும் மாநிலக் காவல்துறை மூலமாக நாங்கள் தொடர்ந்து புகார்களை எழுப்பிய போதிலும், அவை உரிய தீவிரத்துடன் கையாளப்படவில்லை; பல சந்தர்ப்பங்களில் மாநிலக் காவல்துறை முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்யவும் மறுத்துவிட்டது.

சட்டப்பூர்வமான அரசியல் கருத் துக்களைக் குறிவைக்க மாநிலக் காவல்துறை மற்றும் பிற அரசு அதிகார அமைப்புகள் தவறாகப் பயன் படுத்தப் படுகின்றனவா என்பதை ஆய்வு செய்யுமாறு அமைச்சகம், உரிய சைபர் குற்றத் தடுப்பு அதிகாரிகள் மற்றும் அரசை நான் வலியுறுத்துகிறேன்.

மேலும், இது தொடர்பான புகார் கள் குறித்து 'மெட்டா' (Meta) நிறுவ னத்திடம் இருந்து தகவல்களைப் பெறுமாறும், இடைநிலை நிறுவ னங்களின் அமலாக்க நடவடிக்கை கள் அரசியல் சார்பற்றதாகவும், அதே சமயம் வெளிப்படைத் தன்மை, விகிதாச்சாரம் மற்றும் உரிய சட்ட நடைமுறைகளின் கொள்கைகளுக்கு இணங்கவும் இருப்பதை உறுதி செய்யுமாறும் அமைச்சகத்தை வலியுறுத்து கிறேன்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார விநியோகக் கழகம் வரலாற்றிலேயே இல்லாத அளவில்

ஒரு யூனிட்டுக்கு 37 ரூபாய் என்ற உச்ச விலைக்கு வெளிச் சந்தையிலிருந்து மின்சாரம் கொள்முதல்!

'தி டைம்ஸ் ஆஃப் இந்தியா' அதிர்ச்சித் தகவல்!

சென்னை, அக். 14 -

'தி டைம்ஸ் ஆஃப் இந்தியா' வெளியிட்டுள்ள செய்தியில், தமிழ கத்தில் அறிவிக்கப்படாத மின் வெட்டு நிலவி வருவதாகவும், கடந்த சில மாதங்களாக மாநிலத் தின் பல்வேறு பகுதிகளில் நள்ளி ரவு மற்றும் மாலை நேரங்களில் தொடர் மின்வெட்டு ஏற்பட்டு வரு வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்றாலை மின் உற்பத்தி சரிவு மற்றும் மத்திய மின் தொகுப் பில் இருந்து போதிய அளவு மின்சாரம் கிடைக்காததால், தமிழகத்தில் சுமார் 4 ஆயிரம் மெகாவாட் மின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், மாநிலத்தில் நிலவும் மின் பற்றாக்குறையைச் சமாளிக்க, தமிழ்நாடு மின்சார விநியோகக் கழகம் வரலாற்றி லேயே இல்லாத அளவிற்கு உச்ச விலைக்கு வெளிச் சந்தையிலிருந்து மின்சாரம் வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது.

இதன்படி, அக்டோபர் 12 முதல் அக்டோபர் 31 வரை, 24 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதற் காக ஆயிரத்து 500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்யப் பட உள்ளது.

24 மணி நேர மின்சாரப் பயன்பாட்டிற்கு ஒரு யூனிட் சராசரி யாக 34 ரூபாய் 49 காசுகள் வரை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாலை 6 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை நிலவும் கூடுதல் மின் தேவையைச் சமாளிக்க வாங்கப்படும் மின்சாரத்தின் விலை, ஒரு யூனிட்டுக்கு ரூ.37 வரை மிக உச்சகட்ட விலையாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதே காலகட்டத்தில் அண்டை மாநிலமான ஆந்திரா, தங்களின் மின் தேவையை முன்கூட்டியே கணித்து கடந்த மாதமே ஒப்பந்தம் செய்ததால், அவர்கள் 150 மெகா வாட் மின்சாரத்தை ஒரு யூனிட் டுக்கு 20 ரூபாய் வரையிலான விலையில் வாங்குகின்றனர்.

ஆனால் தமிழ்நாடு மின்சார வாரியம் முன்கூட்டியே திட்டமிடாத தால், ஒன்றிய அரசின் வர்த்தக இணையம் வழியாக எந்த ஒரு மாநிலமும் வாங்காத மிக அதிக பட்ச விலைக்கு இந்த மின்சா ரத்தை வாங்க வேண்டிய கட்டா யத்திற்குத் தள்ளப்பட்டுள்ளதாக வும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சென்னையில் 10 மணி நேரத்திற்கும் மேலாக மின்வெட்டு!

அமைந்தகரையில் பொதுமக்கள் சாலை மறியல்!

சென்னை, அக். 14 -

சென்னையில் 10 மணி நேரத்திற்கும் மேலாக மின்வெட்டு ஏற்பட்ட தால் ஆத்திரமடைந்த மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

சென்னை அமைந்த கரையில் பச்சையப்பா கிராமிய தெரு, அரு ணாச்சல தெரு, துரை சாமி ராஜா தெரு, ஐயாவு காலனி உள்ளிட்ட பகுதி களில் கடந்த 2 மாதங்க ளாக தொடர்ச்சியாக மின்வெட்டு நிலவி வரு கிறது.

மின்வாரிய அதிகாரி களைத் தொடர்புகொண்ட டால் முறையாக பதில் அளிப்பதில்லை.

நேற்றிரவு மீண்டும் மின்வெட்டு ஏற்பட்ட தால் தூக்கத்தை இழந்த மக்கள் ஆத்திரமடைந்து அண்ணா வளைவு அருகே சாலை மறியல் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடு பட்டவர்களை த.வெ.க. வினர் மிரட்டுவதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டினர்.

சாலை மறியலால் அரும்பாக்கத்தில் போக்கு வரத்து பாதிக்கப்பட்டது.

முத்துப்பேட்டையில் விவசாயிகள் சாலை மறியல்!

திருவாரூர், அக். 14 –

திருவாரூர் மாவட்டம், முத்துப் பேட்டை அருகே காவேரி கடைமடை பகுதி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடக் கோரி விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் முத்துப்பேட்டை – பட்டுக் கோட்டை தஞ்சாவூர் மற்றும் வேளாங் கண்ணி செல்லும் சாலையில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டம் முழுவதும் 2,40,000 ஏக்கர் பரப்பளவில் விவசாயி கள் நேரடி நெல் விதைப்பு மற்றும் நடவுப் பணியில் ஈடுபட்டுள்ளனர். வழக்கமாக மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறக் கப்படும் நிலையில், இந்த ஆண்டு செப்டம்பர் 1ஆம் தேதியே தண்ணீர் திறக்கப்பட்டது.

இருப்பினும், அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் 45 நாட்களை கடந்தும் முழுமையாக திருவாரூர் மாவட்டத்திற்கு கடைமடை பகுதிவரை வந்து சேரவில்லை.

குறிப்பாக, முத்துப்பேட்டை அருகே உள்ள இடும்பாவனம், கற்பகநாதர் குளம், தொண்டியக்காடு, விளாங்காடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்புப் பணியை மேற்கொண்டிருந்தாலும், முறையாக தண்ணீர் கிடைக்காததால் விவசாயம் செய்ய முடியாமல் அவதிப் பட்டு வருகின்றனர். பொதுப்பணித் துறை அதிகாரிகளின் அலட்சியத்தால் ஆங்காங்கே முறை வைத்து தண்ணீர் விடப்படுவதாக குற்றம்சாட்டும் விவசாயி கள், முறை வைப்பதை கைவிட்டு, கடைமடை பகுதி வரை தடையின்றி தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.